Volume 2 Issue 1 August 2020 E-ISSN: 2582-2063

# அனிச்சம்பாளையம் கண்டியம்மன் திருவிழா - ஒரு கள ஆய்வு

**முனைவர். வை. கதிரவன்**
*உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை*
*வி.இ.நா.செந்திகுமார நாடார் கல்லூரி (தன்னாட்சி), விருதுநகர்*

தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் சிறுதெய்வ வழிபாடு உள்ளது. சிறு தெய்வ வழிபாடு வருடத்தின் அனைத்து மாதங்களிலும் நடைபெறுவது இல்லை அதிகமாக மாசி,பங்குனி,சித்திரை மாதங்களில் நடைபெறுகிறது. ஆனால் நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் வட்டம் அனிச்சம்பாளையம் கிராமத்தில் கார்த்திகை மாதத்தில் கண்டியம்மன் திருவிழா விமரிசையாக நடைபெறுகிறது.

கார்த்திகை மதம் வளர்பிறையில் கண்டியம்மன் திருவிழா கொண்டாடப்படுகின்றது. அவ்விழா வெள்ளிகிழமை அன்று தொடங்கி புதன் கிழமை அன்று முடிவடைகின்றது.

**கண்டியம்மன் வரலாறு**

பெரியகண்டியம்மன், சின்னக்கண்டியம்மன் என இரு சகோதரிகள் இருந்துள்ளனர். அவ்விருவரில் பெரியகண்டியம்மன் காவிரிக்கு வடகரையான அனிச்சம்பாளையத்திலும் சினக்கண்டியம்மன் காவிரிக்கு தென்கரையான புன்செய் புகளூரிலும் வாழ்ந்து வந்துள்ளனர்.

ஒரு சமயம் மந்திரவாதி ஒருவர் புகளூருக்கு வந்து அங்கிருந்த சின்னகண்டியம்மணை தனது மந்திர கட்டுக்குள் கொண்டுவந்து தனக்கு வேலைக்காரியாக வைத்துக்கொண்டுள்ளார். தினமும் காலையில் “அடியே கண்டி” என அழைத்துள்ளார் அதனால் அவரின் தொல்லை தங்காத சின்னகண்டியம்மன் தனது சகோதரி பெரியகண்டியம்மனிடம் வருத்தம் தெரிவித்துள்ளார். அப்போது பெரியகண்டியம்மன் ஒரு திட்டம் வகுத்து அதன் மூலம் பெரியகண்டியம்மன் புகளுருக்கும் சின்னகண்டியம்மன் அனிச்சம்பாளையத்திற்க்கும் ஒரு இரவு மட்டும் இடம் மாறி சென்றுள்ளனர். தன்னை யார் என காட்டாமல் வலை செய்துள்ளார் ஒரு நாள் கண்டியம்மன் எழுந்திரிக்க நேரமாகியுள்ளது. மந்திரவாதி எப்போதும் போல அடியே கண்டி என அழைத்து அதட்டி அடித்துள்ளார். அப்போது ஒரே அடியாக அடித்து கொன்றுவிட்டு கோபத்துடனேயே இருந்துள்ளார். கொல்லப்பட்ட அந்த மந்திரவாதி கோவிலுக்கு நேர் வடதிசையில் கொரைக்காட்டுக்குள் கல் நடப்பட்டுள்ளது.

பின்னர் சகோதரிகள் இருவரும் தங்கள் சொந்த இடத்திற்கு திரும்பி அந்த இடத்திலேயே தங்கிவிட்டனர். இச்செய்தி செவிவழி கதையாக கூறப்படுகின்றது. அனிச்சம்பாளையம் மற்றும் புகளூர் ஆகிய இரு ஊர்களிலும் கண்டியம்மனுக்கான கோவில்கள் உள்ளது.

**கோவில் அமைப்பு**

அனிச்சம்பாளையம் கிராமத்தின் நுழையும் பகுதியில் தெற்கு பார்த்த கோவிலாக அமைந்துள்ளது. பழைய கோவில் ஓடு வேய்ந்த முன்பகுதியும் கற்பகிரகம் கல் மற்றும் சுதைவடிவங்கள் கொண்டு செய்யப்படது. அது பழுதானதும் இடித்துவிட்டு புது கோவில் கட்டியுள்ளனர். சுற்றுசுவர் கிடையாது. கோவிலுக்குள் வில்வ மரம் ஒன்றும் சில தென்னை மரங்களும் உள்ளன.

கண்டியம்மன் சிலை வழியில் இருந்து பார்த்தாலே தெரியும் படி அமைக்கப்பட்டுள்ளது. சுமார் ஐந்தடி உயர சிலை, கையில் சூலம் மற்றும் ஆயுதங்கள் கொண்டுள்ளார்.

கோவிலுக்குள் மதுரை வீரன், பொம்மி, வெள்ளையம்மாள், சன்னதி மற்றும் கருப்பசாமி சன்னதி, விநாயகர், முருகன், சிம்ம வாகனம், சூலம், தூரிக்கள், ஆகியவை உள்ளன.

**திருவிழா**

கார்த்திகை மாதம் வளர்பிறையில் வரும் வெள்ளிக்கிழமை அன்று திருவிழா ஆரம்பிக்கப்படுகிறது. அன்று காலை தண்டோரா முலம் ஊருக்கு அறிவிக்கப்படுகிறது. கோவிலை சுத்தம் செய்கின்றனர் ஊர் பெரியவரகள் கோவிலில் கூடி திருவிழா பற்றி பேசுகின்றனர். எந்த நாள் மெரண்மனை (சப்பரம்) கொண்டு செல்வது. பொது பலி என்று செய்வது என பேசுகின்றனர்.

அடுத்த நாள் காலை கோவிலுக்கு முன் பந்தல் போடப்படுகிறது பின்னர் ஊருக்குள் வரி வசூலிக்க செல்கின்றனர். ஒரு குடும்பத்திற்கு இருநூறு ருபாய் வரி போடுகின்றனர். சென்ற வருடம் வாங்கிய வரிக்கு கணக்கு கொடுக்கப்படுகின்றது. அதி மிச்சம் உள்ள பணம் இந்தவருடம் செலவுக்கு எடுக்கின்றனர். இதற்க்கு பொறுப்பு ஓர் கவுண்டர் மற்றும் தர்மகர்த்தா ஆவார்கள்.

வெள்ளிக்கிழமை அன்று இரவு நோம்பி சாட்டும் முன் மாலை அம்மனுக்கு அபிஷேகம் செய்கின்றனர். பின்னர் இரவு பன்னிரண்டு மணிக்கு ஊரின் நான்கு எல்லைகளுக்கும் வணங்கச்செல்கின்றனர். ஊருக்கு காவல் மற்றும் எல்லை தெய்வங்கள் உள்ளன. வணங்க செல்லும் போது பறையடிப்பவர்கள் முன்செல்கின்றனர் பின்னால் பூசாரி மற்றும் ஊர்பெரியவர்கள் செல்கின்றனர். எல்லைசமிகளுக்கு பூ, பழம், வெற்றிலை பாக்கு, சூடம், பத்தி, எலுமிச்சம்பழம், ஆகியவை கொண்டு செல்கின்றனர்.அங்கு பூசை முடித்து ஊருக்குள் வருகின்றனர்.

அடுத்த இரு நாள்களும் வரி வசூல் மற்றும் இதரவேலைகளை செய்கின்றனர். கோவில் அலங்காரம் நடைபெறுகிறது. பந்தலுக்கு தேங்காய் வாழைமரம் சேகரிப்பு மற்றும் உறவினர்களுக்கு சொல்லிவிடுதல் ஆகிய காரியங்களை செய்கின்றனர்.

திங்கள் கிழமை அம்மன் அலங்காரம் சப்பரம் கொண்டு செல்கின்றனர். அந்த சப்பரத்திற்கு முதல் மரியாதையை ஊரில் இருக்கும் அய்யர் வீடு பெருகிறது. சப்பரம் முதலில் அய்யர் வீட்டுக்கு சென்று திரும்ப ஊருக்குள் வருகிறது. ஊர் மக்கள் தங்கள் வீட்டற்கு முன்னால் தேங்காய், பழம், சூடம், பத்தி, பூ, எடுத்து வைத்து பூசைக்கு கொடுக்கின்றனர். மாலையில் ஆரன்பிக்கும் இந்த ஊர்வலம் இரவு பத்துமணிக்கு சப்பரம் கோவிலுக்கு வந்தவுடன் முடிவடைகிறது. பின்னர் அம்மனுக்கு இரவு பூசை செய்து முடிக்கின்றனர்.

செவ்வாய் கிழமை மா விளக்கு மற்றும் பொங்கல் வைக்கும் நிகழ்ச்சி. அன்று ஊரில் உள்ள பெண்கள் அனைவரும் பச்சரிசி ஊறவைத்து உரலில் இடித்து வெல்லப்பாகு கலந்து அச்சுபோல செய்கின்றனர் அதன் மீது விளக்கு மற்றும் விசிறி வைக்கின்றனர். தேங்காய் பழம் ஏற்பாடு செய்கின்றனர்.

மாலை நேரம் வீட்டிலிருந்து பச்சரிசி, விறகு, பானை இவற்றை கோவிலுக்கு கொண்டுசென்று பொங்கல் வைக்கின்றனர். பொங்கல் பானையுடன் கோவிலில் ஒப்படைத்துவிடுகின்றனர். இரவு மாவிளக்கு ஊர்வலம் நடைபெறுகிறது பெண்கள் அனைவரும் வீட்டில் புறப்படுகின்றனர் அவர்களை அழைத்துவர பறையடிப்பவர்கள் செல்கின்றனர். எட்டுமணிக்கு மாவிளக்கு ஊர்வலம் நடைபெறுகிறது. அடுத்து பொங்கல்பானை மற்றும் மாவிளக்கு பெண்களிடம் திருப்பிதரப்பிடுகிறது.

இரவு பன்னிரண்டு மணிக்கு ஊரின் எல்லைக்கு காவல் மற்றும் எல்லை தெய்வங்களை வணங்கச்செல்கின்றனர். வணங்க செல்லும் போது பறையடிப்பவர்கள் முன்செல்கின்றனர் பின்னால் பூசாரி மற்றும் ஊர்பெரியவர்கள் செல்கின்றனர். எல்லை சாமிகளுக்கு பூ, பழம், வெற்றிலை பாக்கு, சூடம், பத்தி, எலுமிச்சம்பழம், ஆட்டுக்கிடாய், மண் கலையம், சோறு ஆகியவை கொண்டு செல்கின்றனர். அங்கு சென்றவுடன் கொண்டு வந்த பொருட்களை வைத்து எல்லை சாமிக்கு பூசை செய்கின்றனர். அது முடிந்தவுடன்

ஆட்டுக்கிடாயை வெட்டி அதன் ஒரு பகுதி ரத்தத்தில் வட்டோ போடுகின்றனர் அதன் நடுவில் கொண்டுவந்த மண் கலயத்தில் சோறுபோட்டு மீதமுள்ள ஆட்டு ரத்தத்தை ஊற்றி பிசைந்து வைக்கின்றனர். அதற்கு சந்தனம், குங்குமம், வைக்கின்றனர் மாலைபோடுகின்றனர் பின் சூடம் பத்தி வைத்து கும்பிடுகின்றனர். பின்னர் பூசாரி அந்த மண்கலயத்தை எடுத்து வானத்தை நோக்கி வீசுகின்றார். அங்கிருந்து ஊர்பெரியவர்கள் ஊருக்குள்ளும் பறையடிப்பவர்கள் எதிர் திசையிலும் செல்கின்றனர். பறையடிப்பவர்களுக்கு அந்த வெட்டப்பட்ட ஆட்டுக்கிடாயை கொடுத்துவிடுகின்றனர். அவர்கள் வீட்டுக்கு எடுத்துசென்று பங்கிட்டுகொள்கின்றனர்.

மூன்றாம் நாள் திருவிழா புதன் கிழமை கிடாவெட்டு உறவினர்கள் அனைவருக்கும் அன்று கறி விருந்து வைக்கின்றனர். வேண்டுதல் உள்ளவர்கள் சேவல் மற்றும் ஆடு வெட்டுகின்றனர். சிலர் அதிகாலையில் வீட்டின் முன்பகுதி அல்லது ரோட்டில் ஒரு சூடம் கொளுத்தி கடவுளை வணங்கி ஆட்டின் தலையில் மனசை நீரை ஊற்றுகின்றனர். ஆடு தலையை ஆட்டியவுடன் உத்தரவுகிடைத்தாக கருதி வெட்டப்படுகிறது. அன்று ஆடு சுத்தம் செய்வதற்கு வெளியூர்களில் இருந்து ஆட்கள் வருகின்றனர். அதிகமாக வீரப்பூர் எனும் பகுதியில் இருந்து வருகின்றனர். அவர்களுக்கு ஆட்டின் தோலை ஊதியமாக கொடுக்கின்றனர். உணவும் தருகின்றனர். தேவைக்கு அதிகமாக உள்ள கறியை உப்புகண்டம் போடுகின்றனர்

**உப்புகண்டம்**

கறி வேட்டும்போழுதே உப்புகண்ட்த்திற்க்கென்று தனியாக வெட்டச் சொல்கின்றனர். அது கொஞ்சம் பெரிய அளவாக உள்ளது. அந்த கறியை ஒரு பத்திரத்தில் போட்டு மஞ்சள் மற்றும் கல் உப்பு போட்டு கலந்து வைக்கின்றனர். நன்றாக கலந்தவுடன் சணல் கயிறும் கோணி தைக்கும் ஊசியும் கொண்டு கோர்க்கின்றனர். அதை சரமாக கோர்கின்றனர். பின்னர் வீட்டின் வெளிபகுதி அல்லது மாடி பகுதிகளில் மூங்கில் கலி நிறுத்திவைத்து. அதன் மீது இந்த உப்புகண்ட சரங்கள் தொங்க விடப்படுகிறது. ஒரு வாரம் அல்லது பத்து நாளில் காய்ந்து விடுகின்றது. அவற்றை சேகரித்து வைத்து உண்கின்றனர்.

மூன்றாம் நாள் மற்றும் கடைசி நாளில் கிடாவெட்டு முடிந்தவுடன் அன்று மாலை மஞ்சள் நீராட்டு விழ நடைபெறும். அம்மனை அலங்காரம் செய்து சப்பரம் மூலம் மேளத்துடன் ஊருக்குள் கொண்டுவருகின்றனர். முதல் பூசை அய்யர் வீட்டுக்கு முடிந்தவுடன். ஊர்மக்கள் தங்கள் வீட்டு வாசலில் தேங்காய் பழம் பூ மற்றும் மஞ்சள் நீர் கலந்து வைத்துள்ளனர். பூசை முடிந்தவுடன் அந்த மஞ்சள் நீர் மாமன் முறை உள்ளவர்கள் மீது ஊற்றி மகிழ்கின்றனர்.

மஞ்சள் நீராட்டு ஊரின் கடைசி வீடுவரை நடை பெறுகிறது சப்பரம் அதுவரை செல்கிறது. பின்னர் காவேரி ஆற்றுக்கு சென்று அம்மன் அலங்காரம் கலைத்துவிட்டு குளித்துவிட்டு கோவிலுக்கு கொண்டு வருகின்றனர். வரும்போது எந்த வாத்தியங்களும் இசைப்பது கிடையாது சத்தமில்லாமல் கோவிலுக்கு கொண்டுவருகின்றனர்.

அம்மன் ஊருக்குள் கிளம்பியவுடன் கோவிலில் ஒரு சேவல் அறுக்கப்பட்டு சமைக்கப்படும். சதம் மற்றும் அந்த குழம்பு இரவு கடவுளுக்கு படைத்த பின் பொதுமக்களுக்கு வழங்கப்படும். அடுத்த நாள் ஊர் பெரியவர்கள் கோவிலில் அமர்ந்து அந்த வருட வரவு செலவு கணக்குகளை பார்ப்பார்கள் அத்துடன் திருவிழா முடிவுபெறும்.